**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஈரோடு**

முன்னிலை : திரு.R.வாஞ்சிநாதன்., B.A.,B.L.,(Hons).,L.L.M.,P.G.D in J.J & J.P

நீதித்துறை நடுவர் எண்.1, ஈரோடு

2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17–ம் நாள் புதன்கிழமை

(2056 திருவள்ளுவராண்டு, விசுவாவசு வருடம், மார்கழி மாதம் 02–ம் நாள்)

**M.P. No. 1/2025**
**in**
**C.C. No. 119/2019**

சங்கர்,
த/பெ. முருகேசன் ... எதிரி/ மனுதாரர்

/எதிர்/

காவல் ஆய்வாளர்,
ஈரோடு வடக்கு காவல் நிலையம்,
ஈரோடு.
குற்ற எண்.444/2018 ... குற்றம்சாட்டுபவர்/புகார்தாரர்

**உத்தரவு**

இம்மனு குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 311 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம்:**

மனுதாரருக்கு எதிராக இந்திய தண்டனை சட்டம் பிரிவு 392–ன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அ.சா.1–ன் மூலமாக அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.பொ.1–ம், அ.சா.3–ன் மூலமாக அ.சா.ஆ.2–ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் இன்று எதிரி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், சில முக்கிய ஆவணங்கள் கிடைக்காத காரணத்தினால் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்ய முடியவில்லை. மனுதாரர் இவ்வழக்கின் உண்மை தன்மையை வெளிக்கொனர மேற்கண்ட சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்யவேண்டியுள்ளது. ஆகவே, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்வதற்காக மீண்டும் அழைக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) அரசுதரப்பு ஆட்சேபனையின் சுருக்கம் :**

இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய நீதிமன்றத்தால் வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. எனவே இம்மனுவை தள்ளுபடி

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.12.17 16:42:26 +0530

செய்யவேண்டும் என அரசு தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

**3) பிரச்சனை:**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

**4) பிரச்சனைக்கான தீர்வு:**

a). இந்த வழக்கானது அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை முடிக்கப்பட்டு எதிரி/மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைக்காக நிலுவையில் இருந்த சமயத்தில் இம்மனு கடந்த 06.08.2025-ல் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டு M.P.No.1/2025 கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், கடந்த 13.02.2025-ம் தேதி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்ய எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும், அன்றையதினம் மேற்படி சாட்சிகளை எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யவில்லை என்பதும் தெரியவருகிறது.

b) மனுதாரர் தரப்பில் அன்றைதினம் சில முக்கிய சான்றாவணங்கள் கிடைக்காததால் அன்றையதினம் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை என கூறபட்டுள்ளது. ஆனால் ஏன் அந்த சமயத்திலோ அல்லது உடனடியாகவோ இந்த மனுவை தாக்கல் செய்யவில்லை என்பதற்கு தகுந்த காரணங்கள் முன்வைக்கப்படவில்லை. இருப்பினும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தால் தான் மனுதாரர் தன்னுடைய எதிர் வாதத்தை நிரூபிக்க முடியும் என்பதாலும், நீதியின் நலன் கருதியும் செலவுத்தொகையுடன் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகும் நாளன்று ஒவ்வொருவருக்கும் செலவுத்தொகையாக ரூ.1000/-யை செலுத்தவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில்

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.12.17 16:42:32 +0530

இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. மேலும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளுக்கு அழைப்பாணைகளை சார்பு செய்ய படித்தொகையை செலுத்த வேண்டும் என்றும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் ஆகியோர் அழைப்பாணைகளை ஏற்று இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகும் நாளிலேயே மனுதாரர் குறுக்குவிசாரணை செய்ய வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் மீண்டும் வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரி செய்யப்பட்டு இன்று, 2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17–ம் நாள் புதன்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.12.17 16:42:40 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
ஈரோடு.